பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
26-5-1993
யாழ்ப்பாணம்

# தெற்கில் பாரிய தேடுதல் நடத்த அரசு திட்டம்?

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 13 இதழ் 100
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26 05 — 1993

(கொழும்பு)

தெற்கில் கொழும்பிலும் ஏனைய பிரதான நகரங்களி லும் அரசு பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற் கொள்ளத் திட்டமிட்டிருப்ப தாகத் தெரிய வருகிறது. கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் நேரடி மேற்பார் வையின் கீழ் நடத்தப்படவிருக் கும் இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது பல தமிழ் இளைஞர்கள் கைதாவர் என

(3-ம் பக்கம் பார்க்க)

## இளாலி கடலில் நேற்றும் மோதல்

(எழுதுமட்டுவாள்)

இளாலி கடற்பரப்பில் நேற்று அதிகாலையும் விடு தலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினருக்குமிடை யில் கடும் மோதல்கள் ஏற் பட்டதாகக் கூறப்படுகின் றது. நேற்று அதிகாலை கடற் படையின் மூன்று பீரங்கிப் படகுகள் இளாலிக்கரையை நோக்கி 50 கலிபர் தாக்குதல் களையும். பீரங்கித்தாக்குதலை யும் சரமாரியாக மேற் கொண்டன

(3ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வேண்டுகோள் பேரில் புலிகளுடன் பேசுவதற்கு தயார்!

## ஆயர் கெனத் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் ஆலோசனையுடன் கூடிய வேண்டுகோளை ஏற்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுக் கள் நடாத்த தாம் தயாராக இருப்பதாக அங்கலிக்கன் திருச்சபையின் பேராயர் கெனத் பெர்னாண்டோ அறி வித்துள்ளார்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாண விடுதலைப் புலி களின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் பேசுவதற்கு உதவும் படி முன்னர் வேண்டு கோள் விடுத்திருந்தது தெரிந் ததே. ஆயர் கெனத் இந்த வேண்டுகோளை பயன் படுத்தி யுள்ளார்.

அவர் இது சம்பந்தமாக தெரிவித்திருப்பதாவது:

இனப்பிரச்சினை குறித்து வடக்கு கிழக்குப் பகுதி மக் களினதும் தென் பகுதி மக் களினதும் கருத்துக்கள் தற் போது நம்பிக்கை தரக்கூடிய தாக இருக்கின்றன. இனப்பிரச்சினைக்கு தீர்க்க

(4-ம் பக்கம் பார்க்க)

## மணலாறில் புலிகள் தாக்கு

(மணலாறு)

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம், விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தின ருக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

### கட்டைக்காட்டில் இருந்த

## கடற்படைக் கப்பல் புறப்பட்டு சென்றது

(தாளையடி)

கட்டைக்காடு - வெற்றிலைக் கேணி இராணுவ முகாமை அண்டிய கடற் பரப்பில், கடந்த இரண்டு நாட்களாக நங்கூரமிட்டுத் தங்கி நின்ற பாரிய கடற்படைக் கப்பல் நேற்று இரவு புறப்பட்டுச் சென்றது.

கடந்த ஒரு வாரத்தில் 3 தடவை நங்கூரமிட்டுத் தரித்து நின்ற இக்கப்பல் அடிக்கடி காங்கேசன்துறைப் பக்கம் சென்று வந்ததை அவ தானிக்கக் கூடியதாக இருந் தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இளாலி மோதலில் 3 வேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

இளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு விடு தலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு மிடையி லேற்பட்ட கடும் மோதலில் கடற்படையினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டதுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணி பகுதியில் ஷெல் வீச்சு

(தாளையடி)

கட்டைக்காடு - வெற்றிலைக் கேணி இராணுவ முகாமை அண்டிய மண்டலாய் மாவிலங் கைத் தோட்டம் பகுதிகளில் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. அடிக்கடி ஷெல் வீச்சும் இடம்பெற் றன.

தினமும் அதிகாலை வேளை களில் இராணுவ வாகனங் களின் தொடர் அணி ஒன்று மண்டலாய், மாவிலங்கைத் தோட்டம் ஊடாக இயக்கச்சி ஆனையிறவு முகாம் பகுதியை

(4-ம் பக்கம் பார்க்க)

### அராலித்துறைச் சம்பவம்:

## சர்வதேச விசாரணை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட உயர் ராணுவ அதிகாரிகள் அராலித் துறையில் கொலையுண்டதை ஆராயும் சர்வதேச ஆணைக் குழு அதன் விசாரணையை இன்று ஆரம்பிக்கிறது.

கொழும்பு பண்டாரநாய க்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று காலை 9-00 மணிக்கு இக்குழுவின் விசாரணை ஆரம்பமாகும். இக்குழுவுக்குப் பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகளைத்

(3-ம் பக்கம் பார்க்க

## ரூபவாஹினி, வானொலி அதிகாரிகள் மாற்றம்

(கொழும்பு)

ரூபவாஹினி கூட்டுத்தாப னம் மற்றும் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர்களை திடீரென தகவல்துறையமைச் சர் மாற்றஞ் செய்ய உத்தர விட்டுள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கழக அனுமதிப் படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

மே 24-ம், 25-ம் திகதி களில் யாழ். பல்கலைக் கழகத் தில் வழங்கப்பட்ட முதலா

(3-ம் பக்கம் பார்க்க)

### மெக்ஸிக்கோ

## துப்பாக்கிச் சூட்டில் கத்தோலிக்க கருதினல் பலி

(லண்டன்)

மெக்ஸிக்கோவிலுள்ள கத் தோலிக்க திருச்சபையின் கருதினல் ஒருவர் விமானநிலை யத்தில் துப்பாக்கிச்சூட்டில் பலியானார்.

வத்திக்கானிலிருந்து வந்த பிரதிநிதி ஒருவரை வரவேற்ப தற்காக மெக்ஸிக்கோவிமான

(4-ம் பக்கம் பார்க்க)

### அம்பாறை மாவட்டத்தில்

## புலிகள் - ராணுவம் நேரடி மோதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவ தரப் பில் பலத்த சேதம் ஏற்பட்ட தாகக் கூறப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள விநாயகர்புரத்தில் கடந்த செவ்வாய் இரவு 10-45 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவ விசேட அதிரடிப் படையின ருக்குமிடையில் நேரடி மோதல் ஏற்பட்டது. (வி-இ)

## கைதானோர் விடுதலையாவர்

(கொழும்பு)

களுத்துறையில் கைதான 27 தமிழ் இளைஞர்கள் விசாரணை யின் பின் விடுதலை செய்யப் படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (கி-இ)

### வடக்கு-கிழக்கு

## ஆஸ்பத்திரிகளுக்கு ரஷ்ய டாக்டர்கள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு ஆஸ்பத் திரிகளில் கடமையாற்ற பதினைந்து ரஷ்ய டாக்டர்கள் இலங்கை வர வுள்ளனர்.

இவர்களை தெரிவு செய்யும் முகமாக சுகாதார அமைச் சின் அதிகாரிகள் குழு ஒன்று ரஷ்யா செல்லவுள்ளது.

வடக்கு-கிழக்கில் டாக்டர்க ளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதையடுத்தே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. (கி-இ)

## கட்டுத்துவக்கு சூடு ஒருவர் காயம்

(நெல்லியடி)

வீதியில் நடைபெற்றகோஷ்டிச் சண்டையின் போது அப்பகுதியால் சைக்கிளில் தேடிக் காய் கட்டிக்கொண்டுவந்த இளைஞர் ஒருவர் கட்டுத்துவக்குச் சூட்டில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 21-ந் திகதி துன்னாலை கலிகைச் சந்தியில் உள்ள வேம்படி என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றி பருத்தித்துறை காவல்துறையினர் தீவிர விசாரணை செய்ததுடன் பலரைக் கைதுசெய்துள்ளதாக தெரிய வருகின்றது. (-160-சி

## தமிழ்த்தினப் போட்டிகள்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மட்டத்திலான தமிழ்த் தினப்போட்டியின் இயல் சம்பந்தமான பேச்சு, கட்டுரை, சிறுகதை, கவிதை முதலானவை எதிர்வரும் 28ம் திகதி வெள்ளிக்கிழமை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும், நாடகப் போட்டி, 29ம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் இசை, நடனப் போட்டிகள் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையிலும் நடைபெறவுள்ளன. (139)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை சிவன் கோவிலில் இன்று காலை 9 மணிக்கு சேக்கிழார் புராண படனம், உபந்நியாசம், விசேட பூசை என்பன இடம் பெறவுள்ளன.

சேக்கிழார் குருபூசையினர் சார்பாகவே இந்நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (உ)

0 0 0

(மானிப்பாய்)

இராணுவ நடவடிக்கைகளினால் இறந்தவர்கள், காயப்பட்டவர்கள், தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு இன்று 26ம் திகதி இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவுக்கிளையினால் நிவாரணம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

0 0 0

(யாழ்ப்பாண)

ப.நோ.கூ.சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கு முக்கியமான கலந்துரையாடல் இன்று 26ம் தேதி காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைமண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் பொது நிர்வாக தொடர்பக பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள்.

0 0 0

(யாழ்ப்பாண)

பொலிகண்டி இருப்பை மூலை அருட்திரு சித்திவிநாயகப்பெருமான் தேவஸ்தான ஸ்ரீமுக வருட மஹோற்சவங்கள் இன்று 26ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

## கண்காட்சி

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் நடாத்தும் மனைப் பொருளியல் கண்காட்சி ஒன்று ஜூன் மாதம் 21ம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (139)

## பயிற்சி வகுப்பு

(தாவடி)

இப்பகுதிப் பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உதவியாக இலவச பயிற்சி வகுப்புகள் தாவடி செம்பியன்பற்றுகிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டுநடைபெற்று வருகிறது.

தாவடி பங்குத்தந்தை அருட்திரு. ம. டேவிட் அடிகளார் இவ் இலவச வகுப்புகளை நடாத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். (163)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி நாவலம்பதி காட்டு மயிலைக்கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (உ)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சங்கானை வெல்லில் அருள்மிகு ஸ்ரீசிவ சுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

அடுத்தமாதம் 2ம் திகதி காலை 8 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் முற்பகல் 11 மணியளவில் தீர்த்தோற்சவத்துடனும் உற்சவ நிகழ்ச்சிகள் முற்றுப்பெறும். (உ)

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

---

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்

## பெந்தேகொஸ்து செப விழா

மே மாதம் 1993 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

நாள்தோறும்

காலை 7-00 மணி — பரிசுத்த நற்கருணை ஆராதனை
,, 9-00 மணி — வேத வகுப்பு
,, 10-30 மணி — சபையின் சாட்சி வருந்தரங்கு
ந.ப. 12-00 மணி — பரிந்து வேண்டல்
பி.ப. 2-30 மணி — வாலிபர் கூட்டம்
மாலை 4-00 மணி — நற்செய்திக் கூட்டம்

இந்த நாட்களில் ஆண்டவர் பலத்த காரியங்களைச் செய்வாரென்று காத்திருப்போடு செபிக்கவும்.

பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள். அப் 1:5

யாவரும் அன்போடு அழைக்கப்படுகிறீர்கள்.

(Rev. Sevak Sam Alfred)
(சாம் அண்ணன்)

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்,
மருதனாமடம், சுன்னாகம். (கி-144)

---



கோண்டாவில்

## தில்லையம்பதியில் இன்று கொடியேற்றத் திருவிழா

ஒளிக்கும் சிவகாமி உளமகிழ
களிக்கும் மிகஇந்தையின் காரணம் காட்டித்
தெளிக்கும் மழையுடன் செல்வமுண்டாக்கும்
அளிக்குமவனை அறிந்துகொள் வாரீக்கே

(சி-143)

---

# ஆறும் ஆண்டு நினைவஞ்சலி



வல்லை மண்ணளித்த தியாகவேங்கை

## வீரவேங்கை கப்டன் அலன்

தாயின் மடியில்: 06-05-1962 (திரு. நடனசிகாமணி பாக்கியலிங்கம்) தாயக மடியில்: 26-05-1987

இரத்த மண் எங்களின் சொந்தமண் இந்த மண்மீட்புக்கு நாம் அனைவரும் தயார்!

அன்பர்கள் நண்பர்களை இன்று மதியம் ஆனந்தாச்சிரமத்திற்கு அழைக்கின்றோம். (இ-134)

யாழ்ப்பாணம்

# ராஜீவ் கொலை குற்றவாளிகள் எவரும் தப்பியோடவில்லை!

## ஜெயலலிதா கூறுகிறார்

(சென்னை)

ராஜீவ் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எவரும் தப்பி ஓடவில்லை என தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் தகுந்த முறையில் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதையும் சரியான முறையில் நீதி விசாரணை நடாத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கு மாநில அரசு தன்னால் இயன்ற சகல நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.

குற்றச்சாட்டுக்களை தெரிவிக்கமுன்னர் மத்திய உள்துறை அமைச்சர் உண்மையான தகவல்களை விசாரித்து அறிந்திருக்க வேண்டும். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள [சாவிஸ் நவாஸ் சைதாப்பேட்டை சிறையிலிருந்து தப்பிவிட்டது பற்றி முதலமைச்சர் கருத்து தெரிவிக்கையில், சாட்சிகளுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவே சைதாப்பேட்டை முகாம் உருவாக்கப்பட்டதாகவும் சாவிஸ் நவாஸ் ஒரு சாட்சி மட்டுமே என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவர் அல்ல என்றும் கூறினார். (சி)

---

# தமிழக அரசை பதவி நீக்கம் செய்து பேரவையை இடைநிறுத்துக

(சென்னை)

தமிழக அரசை பதவி நீக்கம் செய்துசட்டப்பேரவையை தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டுமென ஜனதாக்கட்சி கூறியுள்ளது.

தமிழகத்தில் அரசியல் சாசனப்படி மாநில அரசாங்கத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தக்கட்சியின் மாநிலத் தலைவர் திருமதி சந்திரலேகா துணைத்தலைவர் திரு. பாலா பழனு ஆகியோர் கூறியுள்ளனர்.

மத்திய புலனாய்வு நிறுவனங்கள் தமது அரசை கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டிருப்பதாக ஜெயலலிதா கூறியுள்ளது அவரது முதிர்ச்சியின்மையை காட்டுவதாகவும் மத்திய அரசுக்கு சவால் விடுவதாக உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (இ)

---

# ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகராக ஆட்டிகல

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பாதுகாப்பு ஆலோசகராக ஜெனரல் சேபால ஆட்டிகல நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பிரிட்டனில் இலங்கைத் தூதுவராக கடமையாற்றும் இவர் ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (இ)

---

# ரெலோ தீவிரவாதி சரணடைந்தார்

(சென்னை)

கடந்த வெள்ளிக்கிழமை திருச்செந்தூரில் தனி அகதிகள் முகாமிலிருந்து தப்பிச் சென்ற ரெலோ தீவிரவாதியான விஜயகுமார நேற்று முன்தினம் சென்னையில் அகதிகள் மறுவாழ்வு துறை ஆணையாளர் முன்பு சரணடைந்தார்.

காவல்துறையினர் அவரை கைதுசெய்து திருச்செந்தூரிலுள்ள அகதிகள் முகாமிற்கு கூட்டிச்சென்றுள்ளனர். (சி)

---

# கண்டெடுத்த பொருட்கள்

கொட்டடி நடராசா என்பவரால் திருநாவற்கரசு திவாகரன் (மாணவன்) என்பவரின் அடையாள அட்டையும் (இல. 752140685 V. திருநாவற்கரசு வரமதி (மாணவி) என்பவரின் அடையாள அட்டையும் (இல. 73679235-V) திருமதி இரா சரத்தினம் திருநாவற்கரசு அக்வாய் என்பவரின் அடையாள அட்டையும் (இல. 367480408-V). 1993ம் ஆண்டுக்குரிய பொக்கற் கலண்டரும் தேசிய அடையாள அட்டைகளில் வைக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (59)

---

## இராசி பலன்

26-05-1993

புதன்கிழமை

(தமிழுக்கு வைகாசி 13)

பஞ்சமி பி. ப. 3-55 வரை, பூசம் பி. இ. 12-58 வரை, சித்தயோகம் இராகுகாலம் 11-52 முதல் 1-22 வரை. சுபநேரம் மாலை 4-22 முதல் 5-52 வரை.

மேஷம்: பிறரால் ஏமாற்றம், மனக்கஷ்டம், அதிருப்தி.

இடபம்: அறிவுக் கூர்மை, காரிய வெற்றி, புதிய ஸ்தானம்.

மிதுனம்: தொழில் குறைபாடு, வீண் அச்சம், மனச் சஞ்சலம்.

கடகம்: தனலாபம், தொழில் சிறப்பு, கூடிப் பேசுதல்.

சிங்கம்: பிறர் துன்பம், ஆரோக்கிய குறைவு, வீண் விரயம்.

கன்னி: நினைத்தது கைகூடும், மனமகிழ்ச்சி, புதிய சிந்தனை.

துலாம்: பயண அனுகூலம் பிறர் நன்மை கருத்துவேறுபாடு.

விருச்சிகம்: உறவினர் பகை தொழில் நஷ்டம், வெறுப்பு.

தனுசு: மதிப்பை இழத்தல், புத்திர சோகம். மன சஞ்சலம்.

மகரம்: நண்பர்கள் சேர்க்கை, உல்லாச வாழ்வு, காரிய சித்தி.

கும்பம்: மனைவியின் அறிவுரை, புதிய முயற்சி, தெய்வ தரிசனம்.

மீனம்: அவமதிப்பு, இடம் மாறுதல், தொழில் கஷ்டம்.

— ஜோதிடர்

---

# வீரப்பனை பிடிக்க இராணுவம் தேவையில்லை

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனை பிடிக்க இராணுவத்தின் உதவியை நாடப்போவதில்லையென கர்நாடக முதல்வர் திரு. வீரப்பமொய்லி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: வீரப்பனை பிடிக்கும் ஆற்றலும் மனோ தைரியமும் தமிழக கர்நாடக அதிரடிப்படையினருக்கு இருப்பதாகவும் கூறினார்.

வீரப்பன் கும்பலை பிடிக்க முடியாது இரு மாநில காவல் துறைகளும் திணறுவதாகவும் வீரப்பனை பிடிக்க உடனடியாக இராணுவம் வரவழைக்கப்படவேண்டுமெனவும் இது தவறும் பட்சத்தில் பிற்காலத்தில் விளைவுகள் மோசமாகலாமெனவும் பல கட்சிகளும் இரு மாநில அரசுகளையும்எச்சரித்துள்ளன. (இ)

---

### புலிகள் விவகாரத்தில்

# அரசின் கொள்கையில் மாற்றம் இல்லை — பிரதமர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, விடுதலைப் புலிகள் விவகாரம் தொடர்பாகக் கடைப்பிடித்த கொள்கையில் தற்போது எதுவித மாற்றமும் கிடையாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தும் கொள்கையை இலங்கையின் புதிய அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும்.

நிலையான சமாதானத்திற்கு அத்தியாவசியமான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றையும் அரசு எதிர்பார்த்து நிற்கிறது. அடுத்த வருட இறுதியில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் தயாராகிவிடும்.

1995ம் ஆண்டில் நடைபெற இருக்கும் தேர்தலில் தமிழ்மக்கள் பங்குபற்றும் நிலை ஏற்பட்டால், அதுவே தற்போதைய அரசுக்குப் பெரும் வெற்றி என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (சி-வி-இ)

---

# தமிழக புதிய ஆளுநர் ஒரு ஆடம்பரப் பிரியர்

(லண்டன்)

தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட சென்னா ரெட்டி ஒரு ஆடம்பரப்பிரியர் என்றும் முன்கோபக்காரர் என்றும் பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

அண்மையில் இவர் குடியிருந்த ஆளுநர் மாளிகை 30 லட்சம் ரூபாய் செலவு செய்து வர்ணம் பூசப்பட்டது.

கடந்த பல மாதங்களாக இவரின் கீழ் பணிபுரிந்த பல உயர் அதிகாரிகளை தனது முன்கோபத்தால் அவமானப்படுத்தினார்.

இவரின் கடும்சொல்லை பொறுக்கமுடியாது ராஜஸ்தானில் பல அமைச்சர்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்ய முனைந்தனர்.

இதனால் இவரை பதவி விலக்கும்படி ஆந்திரா காங்கிரஸ் கட்சியின் சில மூத்த உறுப்பினர்கள் பிரதமர் நரசிம்மராவுக்கு வேண்டுகோளும் விடுத்தும் உள்ளனர் என்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (வி-இ)

---

### உ. அ. அ. அலுவலகங்களில்

# கடவுச்சீட்டு விண்ணப்ப படிவங்களை பெறலாம்

(மாணிப்பாய்)

கடவுச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை இனிமேல் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் பெறலாம்.

இவ்வாறு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட அறிவித்தலொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் மாவட்ட செயலகங்கள் மூலமே ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தன. தற்போது மக்கள் இலகுவாக பெற்றுக்கொள்ளும்முகமாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கடவுச்சீட்டு விண்ணப்பங்களுடன் வர்ணப் படங்கள் (கலர்) இணைப்பதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்றும் கறுப்பு வெள்ளை நிற புகைப்படங்களே பெற்றுக்கொள்ளப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

---

## ஆங்கில தினம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் ஆங்கிலதினம் எதிர்வரும் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் வி. கைலேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் சாவகச்சேரி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர். வைகுந்நாதன் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் கே சந்திரசேகரா, தென்மராட்சி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு. சுரேஷ் ஆகியோர் விசேஷ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (இ)

---

### பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது படிவங்களைப் பல்வேறு காரணங்களால் பெறத் தவறிய மாணவர்கள் அவற்றை இன்று 26-ம் திகதி தொடக்கம் பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

180 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்ற மாணவர்கள், தங்கள் பரீட்சைப் பெறுபேறு மொத்தப் புள்ளி, தேசிய அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் நேரடியாகச் சென்று இப்படிவங்களைப் பெறலாம் என யாழ். பல்கலைக்கழகப்பதிவாளர் அறிவித்துள்ளார். (159-இ)

---

### தெற்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதி தீவிரவாதிகள் நாட்டின் முக்கிய நகரங்களில் தாக்குதல்களை நடாத்தத் திட்டம்தீட்டியுள்ளதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்று முப்படைத் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

முக்கியமாக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடாத்தத் திட்டம் தீட்டியுள்ளனர் என்றும்,

தீவிரவாதிகள் கொழும்பில் பல இடங்களில் தங்கியிருப்பதாகவும் வேறு சிலர் தொழில் ஸ்தாபனங்களில் வேலைசெய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களைக் கைது செய்வதற்கே அரசு பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது. (வி-இ)

---

### அராலித்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி கொப்பேகடுவ கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே சர்வதேச விசாரணையாளர் இதனை விசாரிக்க அரசினால் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (சே)

---

### கிளாலி கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் கடுமையான எதிர்தாக்குதல்கள் மேற்கொண்டதில் கடற்படையினர் தமக்கு ஏற்பட்ட சேதங்களுடன் திரும்பிச் சென்றுவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (170 - வி- இ

---

### ரூபவாஹினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியான உயர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் பதவி நீக்கம் அல்லது மாற்றங்களை முன்னர் ஜனாதிபதி பிரேமதாசாவே கையாண்டு வந்தார்.

ஜனாதிபதி டி.பி விஜேதுங்க தற்போது முழு அமைச்சுப் பொறுப்பையும் அமைச்சர்களுக்கே விட்டதிலிருந்து அமைச்சர்கள் தாங்களே பொறுப்பெடுத்து நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதன் ஒரு கட்டமே இந்த திடீர் மாற்றமுமாகும்.

இது பற்றி பி பி.ஸி.யின் கொழும்பு முகவர் கருத்துத் தெரிவிக்கையில், திரு. பிரேமதாசா பதவியில் இருந்தபோது தமது ஒவ்வொரு அசைவையும் வானொலி, ரூபவாஹினியில் கண்டுபிடித்து ஒலிபரப்ப வேண்டுமென ஆணையிட்டிருந்தார்.

ஆனால் புதிய அதிபர் விஜேதுங்க ஒரு புதிய அணுகுமுறையை நடைமுறைப்படுத்துகின்றார் அதாவது, ஒலி, ஒளிபரப்பில் தனது பேச்சையும், படங்களையும் அதிகம் பிரபல்யப்படுத்தப்பட வேண்டியதில்லை என அறிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி பதவியேற்று ஒரு மாதத்தினுள் பல மாற்றங்களைச் செய்து வருகிறார்.

ஏயர் லங்காவின் பணிப்பாளர் சபையையும் மாற்றியதோடு, ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழுவையும் கலைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (கே-இ)

## வரதராஜப்பெருமாள் கொழும்பு வருவார்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கொழும்பு வரவுள்ளதாக கொழும்புப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அடிக்கடி இந்தியா சென்று இது தொடர்பாக திரு. பெருமாளுடனும், இந்திய அதிகாரிகளுடனும் கதைத்திருந்தார்.

எனினும் திரு. வரதராஜப் பெருமாளின் இலங்கை வருகைக்கான நோக்கம் பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

இதேவேளையில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானத் திட்டம் ஒன்றுடன், திரு. வரதராஜப் பெருமாள் விரைவில் கொழும்புக்கு வரவிருப்பதாகத் தலைநகரில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது. (சி-இ)

## மோட்டார் ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் ஊர்தி பதிவுகள் முதல் கட்டமாக யாழ். உ. அ. அதிபர் பிரிவிலும், இரண்டாம் கட்டமாக நல்லூர் உ. அ. அதிபர் பிரிவிலும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஸ்ரீலங்காவால் வழங்கப்பட்ட மோட்டார் ஊர்தி பதிவுச் சான்றிதழ், இறக்குமதி சிட்டை அத்தாட்சிப் பத்திரம் உள்ளவர்களும், மூல ஆவணங்கள் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

மேலும் எமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து வட பகுதிக்கு வெளியே சென்று வரும் ஊர்தி உரிமையாளர்களும் இப்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர். இத்துடன் பதிவுகளை மேற்கொள்ளவருபவர்கள் குடும்ப அட்டையையும் தவறாது கொண்டுவருமாறு போ. வ. க. பிரிவின் மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர். மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோ. ஊர்தி பதிவுச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வி-இ)

## பரீட்சை பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 29ம் திகதி கொழும்பில் நடைபெறவிருந்த பொது எழுதுவினைஞர் சேவையின் மூப்பு அடிப்படையில் அதிசிறப்பு வகுப்புக்குப் பதவி உயர்வு செய்வதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளரால் பின்போடப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள், இப்பரீட்சை நடைபெற வேண்டிய புதிய திகதியை யாழ். அரச அதிபருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கும்படி கேட்கப்படுகின்றனர். (159-இ)

## வட இலங்கைக்கு பொருட்கள் கடத்த முயன்ற மூவர் கோடிக்கரையில் கைது

(சென்னை)

இராமநாதபுர மாவட்டம் கோடிக்கரையில் வட இலங்கைக்கு பொருட்களை கடத்த முயன்ற இலங்கைத் தமிழர் உட்பட 3 பேர் கைதாகியுள்ளனர்.

சுங்கப்பகுதியினர் அப்பகுதியில் திடீர்சோதனையொன்றை நடத்தியபோது இயந்திரப்படகொன்றில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் கடத்த இருந்ததைக் கண்டுபிடித்ததோடு மூவரையும் கைது செய்தனர்.

வேறு மூவர் அங்கிருந்து தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கே)

## தமிழக அரசின் போக்கு மக்களுக்கு சந்தேகம் தருகிறது — சவான்

(சென்னை)

சென்னை சைதாப்பேட்டை சிறையிலிருந்து விடுதலைப்புலி போராளி ஒருவர் அண்மையில் தப்பிச் சென்ற சம்பவமானது விடுதலைப் புலிகள் குறித்த விவகாரத்தில் தமிழக அரசின் போக்கில் மக்களுக்குச் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது என இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

ஔரங்கபாத்தில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-இ)

## தமிழக அரசு விவகாரம்: மத்திய அரசு முயற்சிக்கு ஜனதா கட்சி எதிர்ப்பு

(புதுடில்லி)

மத்திய அரசும், இந்திரா காங்கிரஸ் கட்சியும் இணைந்து தமிழக அ. தி. மு. க. அரசை கவிழ்க்க முயற்சித்து வருவதை பாரதீய ஜனதா கட்சியின் துணைத்தலைவர் ஜெனகிருஷ்ண மூர்த்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசியல் சட்டம் 356 ஆம் பிரிவைப் பயன்படுத்தி மாநில அரசை நீக்குவதற்கு மத்திய அரசு முயற்சி செய்யுமானால் அதை பாரதீய ஜனதா கட்சி முழுமையாக எதிர்க்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (கே-கி)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்தாயிரம் தமிழர் வைத்தியவசதியின்றி அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரைப் பகுதியில் வாழும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் வைத்திய வசதிகள் ஏதுமின்றி மிகவும் கஷ்டப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்பு வாகரைப்பகுதியில் நான்கு வைத்தியசாலைகள் இயங்கி வந்தன. அவைகளை இராணுவத்தினர் தற்போது மூடிவிட்டதனால் இப்பகுதி மக்கள் வைத்திய வசதிகள் ஏதுமின்றி மிகவும் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய சிகிச்சைகளுக்கு மட்டுமே இராணுவத்தினர் இப்பகுதி மக்களை வாழைச்சேனைக்கோ அல்லது மட்டுநகருக்கோ செல்வதற்கு அனுமதிப்பதாகவும் கூறப்படுகின்றது. (வி-இ)

**மணலாறில்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதலில் இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை. (வி-இ)

**ஜனாதிபதி**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மான ஒரு முடிவைக் காணும் வகையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து செல்லும் வாய்ப்புக்கள் இப்போது ஏற்பட்டுள்ளன என்றார். (வீ-இ)

**வெற்றிலைக்கேணி**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிச் செல்வதை வாகனங்களின் சத்த ஒலி மூலம் அறியக்கூடியதாக இருப்பதாக அயலிலுள்ள கிராமமக்கள் தெரிவித்தனர்.

நேற்றுப் பகல் ஹெலிக்கொப்டர் ஒன்று இருதடவை பலாலியிலிருந்து ஆனையிறவு வெற்றிலைக்கேணி முகாமுக்கு வந்து சென்றது. (163-இ)

**கட்டைக் காட்டில்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கப்பல் நங்கூரமிட்டுத் தங்கி நின்ற நாட்களில், கடற்பகுதியில் பீரங்கிப் படகுகள் பகல் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டன.

கப்பலுக்கு மிக அண்மையில் கடற் பரப்புக்கு மேலாக சீ-பிளேன், ஹெலிகொப்டர்கள் அடிக்கடி வட்டமிட்டுச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. (163-இ)

**இளாலி**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கப்டன் ஸாஜஹான் (லூர்த்து சேவியர் சீலன்- மணற்காடு), லெப். மணியரசன் அல்லது தங்கண்ணன் (பொன்னம்பலம் ரவீந்திரன்- பருத்தித்துறை), லெப். [illegible] (காளிமுத்து மனோகரன்-கிளிநொச்சி) ஆகிய மூன்று போராளிகளுமே வீரச்சாவடைந்தவர்களாவர். விடுதலைப் புலிகள் இவர்களுக்கு தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (வி-இ)

**மெக்ஸிக்கோ**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்துக்குச் சென்ற 66 வயதுடைய கருதினால் கலக்கோஸ் விமான நிலையத்தில் போதைப்பொருள் கடத்தல் சம்பந்தமான இரு குழுக்களுக்கிடையில் திடீரென ஏற்பட்ட துப்பாக்கிச்சண்டையில் நடுவில் அகப்பட்டு பலியானார்.

இந்தச் சண்டையில் கருதினாலின் கார்சாரதி உட்பட வேறு ஐந்து பயணிகளும் பலியானார்கள்.

கருதினாலின்மரணம்குறித்து வத்திக்கான் சபையின் உயர் பீடம் கவலை தெரிவித்துள்ளதுடன் தமது கடும் ஆட்சேபத்தையும், மெக்ஸிக்கோ அரசிடம் தெரிவித்துள்ளது. (வி-இ)

## ஈ. பி. டி. பி. கொழும்பு திரும்பியது காவல் பணியில் இராணுவம்

(கொழும்பு)

ஈ. பி. டி. பி. இயக்கம் மீண்டும் கொழும்பு திரும்பி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கொலையுண்டதை அடுத்து, கொழும்பில் இருந்த ஈ. பி. டி. பி.யின் தலைமை அலுவலகம் மூடப்பட்டு, அவர்கள் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டனர்.

இப்போது அவர்கள் மீண்டும் கொழும்பு வந்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

கொழும்பிலுள்ள இவர்களது அலுவலகத்தில் தற்போது இராணுவத்தினர் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முன்னர் ஈ. பி. டி. பி. உறுப்பினரே இந்தப்பணியில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஆட்டுவித்தவர் இல்லை; ஆடியோர் உள்ளனர்

(கொழும்பு)

"ஆட்டுவித்தவர் போனாலும், அவரின் ஆட்கள் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள்"

திரு. பிரேமதாஸாவின் மறைவின் பின் புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பல புதிய நடைமுறைகளை கடைப்பிடிப்பது பற்றி உங்கள் கருத்து என்ன என எதிரணி உறுப்பினர் ஒருவரை பி. பி. ஸி. நிருபர் கேட்டபோது அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தனர்.

இதுபற்றி பத்திரிகையாளர் ஜயசிங்கவை பி. பி. ஸி. நிருபர் கேட்டபோது முன்னைய அதிபர் போல் அல்லாது புதிய ஜனாதிபதி தனது செய்திகளையும் படங்களையும் ரூபவாஹினி வானொலியில் ஒளி, ஒலி பரப்புவது குறைத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இது ஆரம்பத்தில் இப்படி இருந்தாலும் நெடுங்காலம் நீடிக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும் என்றார். (கே-இ)

## க. பொ. த. (சா/த) பரீட்சை: சங்கீத, நடன பெறுபேறுகள் அனுப்பப்பட்டன

(திருநெல்வேலி)

நடைபெற்று முடிந்த க. பொ. த. (சாதாரணதர) 1990/90-ம் ஆண்டு பரீட்சைகளுக்கான சங்கீத, நடன பாடங்களுக்கான பெறுபேறுகள் நேற்று கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

பாடசாலை தத்தமது கோட்டக்கல்விப் பணிமனைகளில் இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இப்பெறுபேறுகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டது. (157)

## செப்ரிசிமியா நோயினால் சிறுவர் கடும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் செப்ரிசிமியா நோயினால் பாதிக்கப்பட்டவர், யாழ். வைத்தியசாலையில் தினமும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இனம் காணப்படாத இந்த நோயினால் சிறுவர்களே அதிகம் பாதிக்கப்பட்டு வருவதாகவும், பல சிறுவர்கள் கடுமையான நிலையில் சிறுவர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதத்தில் செப்ரிசிமியாவினால் பாதிக்கப்பட்டு ஏழுக்கும் அதிகமான குழந்தைகள் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56-கி)

## வலை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மாரீசன் கூடல் மீனவசங்கத்தில் இருந்து கடற்புலிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட 15-பயனாளிகளுக்கு வலை விநியோகம் செய்யும் நடவடிக்கை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் கடல்வள அபிவிருத்தி பகுதியால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவர்களுக்கான வலை விநியோகம் செய்யும் நிகழ்வு இன்று 26-ம் திகதி காலை 11-00 மணிக்கு கொக்குவிலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக முதன்மை செயலகத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

## விரிவுரை பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன்கோவில் வருடாந்த மகோற்சவ காலத்தில் பத்துத்தினங்கள் பெரிய புராண தொடர்விரிவுரைகள் இடம் பெற்றன. இந்நிகழ்ச்சியை திருநெல்வேலி [illegible] இந்து இளைஞர் மன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

நிறைவு நாளாகிய கடந்த வியாழக்கிழமை தொடர்விரிவுரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியரும் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளருமாகிய திரு. த. சிவகுமாரனை யாழ். ஹற்றன்நேஷனல் வங்கிஉதவி முகாமையாளர் திரு. எம். ராஜேந்திரம் பொன்னாடை போர்த்தி கௌரவித்து பாராட்டுரை நிகழ்த்தினார்.

விரிவுரை இடம்பெற்ற காலத்தில் பெருமளவு பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர். திரு. நரேந்திரநாதன் தலைமை வகித்த இவ்விழாவில் செல்வன் கஜதேவசங்கர் நன்றியுரை நிகழ்த்தினார். -கி

இப்பத்திரிகை "ஈழநாடு" [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1993-ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under License Number [illegible]